18th July 1962]

துறையூர் மருத்துவமனை

*** 383 கேள்வி.—திரு. முனு ஆதி (திரு. து. ப. அழகமுத்து சார்பாக) :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

துறையூர் ஊராட்சி மன்ற மருத்துவ மனையை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : There is no proposal before Government to provincialise the Thuraiyur Panchayat Union Dispensary.

அரிசனங்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

*** 384 கேள்வி.—திரு. அ. ஆறுமுகம் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அதிகமான அரிசனங்கள் கூட்டுறவு இலாகா மூலமாக கடன் வசதியும் தொழில் வசதியும் அடைய மாகாண ரீதியில் அவர்களுக் கென தனியாகக் கூட்டுறவு சொசைட்டிகள் அமைக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. பி. பழனிப் பிள்ளை : ஹரிஜனங்களுக்கென்று இருப்ப தற்குப் பதிலாக ஒதுக்கப்பட்ட மக்களுக்காவது கடன் வசதியும், தொழில் வசதியும் அளிப்பதற்கு கூட்டுறவு சொஸைட்டிகள் அமைக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு சொஸைட்டிகளை மாகாண லெவலில் அல்லது ஜில்லா லெவலில் ஹரிஜன மக்கள் அல்லது பின்தங்கிய மக்களுக்கென்று பிரித்து வைக்க உத்தேசம் இல்லை. அதிலும் இப்படியே பிரித்துக்கொண்டு போகக்கூடாது. ஏற்கனவே பல சொஸைட்டிகளில் கிராமாந்திரத்தில் மில்க்மென் கோவாப்ப ரேட்டிவ் சொஸைட்டி, சால்ட் வொர்க்கர்ஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டி, கோவாப்பரேட்டிவ் ஃபார்மிங் சொஸைட்டி ஆகிய இந்த மாதிரி சொஸைட்டிகளில் அவர்களுக்குச் சலுகை கொடுத்து உதவி செய்யப்படுகிறது.

திரு. கே. பி. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்போது இருக் கக்கூடிய கூட்டுறவு கிரெடிட் சொஸைட்டிகளிலே அரிஜனங்கள் மெம்பர்களாக வேண்டுமென்று கேட்டாலும்கூட, இந்த சொஸைடிகளிலே இருக்கக்கூடிய பிரசிடெண்டுகள் அதற்கு இணங்கி அவர்களை மெம்பர்களாகச் சேர்ப்பதில்லை. இது சர்க் காரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால், அதுசம்பந்தமாக சீக்கிரம் நடவடிக்கை எடுப்பார்களா? 9-00 a.m.

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்திலே இந்த மாதிரி வந்து, இப்போது சட்டத்திலேயே திருத்தம் செய்திருக்கிறோம். இப் போது பெடிஷன் போட்டவுடன் மற்றவர்களைப்போல் சேர்க்கக்

கூடிய நிலைமையை உண்டாக்கி இருக்கிறோம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கிராமக் கூட்டுறவு கடன் கொடுக்கும் சங்கங்களில் அரிஜனங்கள் அங்கத்தினர்களாக சேர்வதற்குத் தடை கிடையாது ; வாஸ்தவம்தான். ஆனால் கடன் பெறுவதற்கு வேண்டிய யோக்கியதாம்சம் பெரும்பாலும் அரிஜனங்கள் விவசாயத் தொழிலாளர்களாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு குறைந்தபட்சம் தொகை கடனாகக் கொடுப்பதற்கு சர்க்கார் ஜாமீன் கொடுக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், கூட்டுறவு சங்கங்களிலே மெம்பர்களாகச் சேரவேண்டுமென்றால், டைரக்டர் அனுமதி அளிக்கவேண்டும். இப்போது இருக்கின்ற முறையில் அன்-லிமிடெட்டாக இருக்கின்ற காரணத்தினால், இதிலே ஏழைகளாக இருக்கின்றவர்களை மெம்பர்களாகச் சேர்த்தால் சங்கம் தாளாது என்பதற்காக அவர்களைச் சேர்க்க மறுக்கிறார்கள். ஆகவே, யாராக இருந்தாலும்—அது ஏழையாக இருந்தாலும், அரிஜனங்களாக இருந்தாலும்—அந்தக் கிராமத்திலே உள்ளவர்கள் மனுக் கொடுத்தால் சேரலாம் என்கின்ற முறையிலே சட்டத்தைத் திருத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இதைப்பற்றி ரொம்ப நாளைக்கு முன்பே சட்டத்திலே திருத்தம் செய்திருக்கிறோம். யார் வேண்டுமானாலும் விண்ணப்பம் போடலாம் ; முடியாது என்று சொல்வதற்கு டைரக்டருக்கு அதிகாரம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : அரிஜனங்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது ஏற்கனவே இருக்கும் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களிலே கடன் கொடுக்கப்படும்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, அரிஜனங்கள் வீடு கட்டும் கூட்டுறவு சொஸைடிகளிலே அவர்களால் ஷேர் காபிடலில் 50 சதவிகிதம் அல்லது 75 சதவிகிதம் அரசாங்கத்தில் இருந்து கடன் தொகையாகவாவது அல்லது இலவசமாகவாவது கொடுப்பதற்கு ஆலோசிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்லியது ஏற்கனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், ஷேர் காபிடலை பொதுவாகக் கடனாக அளிக்கலாம் என்று அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.